# ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்ந்த தேசிய அளவிலான கருத்தரங்கம்



தாம்பரம்:

சென்னை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்ந்த தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இதன் துவக்க விழாவை முதல்வர், முனைவர் சி.வி.ஜெய குமார், துறைத் தலைவி முனைவர் லதா மற்றும் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சென்னை பல்கலைகழக இணையத் தடவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப மைய இயக்குநர், முனைவர் கலா பாஸ்கர் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். கருத்தரங்கில் 100 க்கும் அதிகமான ஆய்வுகட்டுரைகளை பேராசிரியர்கள், மற்றும் மாணவ, மாணவிகளுக்கு சமர்பிக்கபட்டது. கருத்தரங்கின் போது ஆய்வு கட்டுரைகளின் தொகுப்புகள் அடங்கிய குறுந்தகடு மற்றும் ஆய்வுமலர் வெளியிடப்பட்டது. இதில் ஆசிரிய பெரு மக்கள் உட்பட மாணவ, மாண வியர்கள் கலந்துகொண்டனர்.